**நாகப்பட்டினம், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்புகளுக்கு உடனடி மாணவர் சேர்க்கை (I) 22.09.2025 அன்று நடைபெற உள்ளது, பொது கலந்தாய்வில் கலந்து கொள்ளாதவர்கள் மற்றும் கலந்தாய்வை தவற விட்டவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளலாம் - துணைவேந்தர் முனைவர் நா. ∴பெலிக்ஸ் அவர்கள் அறிவிப்பு**

துணைவேந்தர் முனைவர் நா. ∴பெலிக்ஸ் அவர்கள் தெரிவித்ததாவது...

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பல்வேறு இளநிலை பட்டப்படிப்புகளான பி.டெக் (உயிர் தொழில்நுட்பவியல்), பி.டெக் (உணவு தொழில்நுட்பவியல்), இளநிலை வணிக நிர்வாகவியல், மூன்று வருட இளநிலை தொழில்சார் பட்டப்படிப்பு (தொழில்சார் நீர்வாழ்வுயிரி வளர்ப்பு) மற்றும் இளநிலை தொழில்சார் பட்டப்படிப்பு (தொழில்சார் மீன்பிடித் தொழில்நுட்பங்கள்) ஆகிய பட்டபடிப்புகளுக்கு உடனடி மாணவர் சேர்க்கை 22.09.2025 திங்கட்கிழமை அன்று நடைப்பெறுகிறது.

இப்பல்கலைக்கழக இளநிலைப் பட்டப்படிப்பு 2025-26 சேர்க்கைக்கு விண்ணப்பித்தவர்களில், கலந்தாய்வுக் கட்டணம் செலுத்தாதவர்கள், பொது கலந்தாய்வில் கலந்து கொள்ளாதவர்கள் மற்றும் கலந்தாய்வை தவறவிட்டவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும், பொது கலந்தாய்வில் இடம் கிடைக்கப்பெற்று ஏற்கனவே சேர்க்கை பெற்றவர்கள், கலந்தாய்வில் கலந்து கொண்டு தேர்வுசெய்தப் பட்டப்படிப்பு சேர்க்கையை இரத்து செய்தவர்கள் அல்லது இடைநிறுத்தம் செய்தவர்கள் உடனடி மாணவர் சேர்க்கையில் மீண்டும் அந்தக் குறிப்பிட்ட பட்டப்படிப்புக்கானக் கலந்தாய்வில் கலந்துகொள்ள முடியாது.

இதில், விருப்பம் உள்ள மாணவர்கள் உரிய தேதியில் நாகப்பட்டினத்தில் உள்ள மீன்வளப் பல்கலைக்கழக தலைமையகத்தில் நேரில் சென்று கலந்து கொள்ள வேண்டும். மாணவர்களுக்கான வருகைப்பதிவேட்டில் காலை 11 மணிக்குள் வருகையைப் பதிவிட்டு கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம்.

உடனடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொண்ட மாணவர்களின் வருகைப்பதிவேடு குறிக்கப்பட்டு தரவரிசை நிர்ணயிக்கப்படும். அதன் அடிப்படையில் மாணவர்கள் கல்லூரி மற்றும் பட்டப்படிப்பை தேர்வு செய்ய அழைக்கப்படுவார்கள். கலந்தாய்வில் கலந்துகொண்டு கல்லூரியை தேர்வு செய்தபின் கலந்தாய்வு கட்டணத்தையும் (SC/SCA/ST – ரூ.100/- மற்றும் இதர வகுப்பினர் ரூ.200/-) சேர்க்கை கட்டணத்தையும் (ரூ. 10,000/-) கலந்தாய்வின் முடிவில் செலுத்தி தங்களின் சேர்க்கையினை உறுதிசெய்து கொள்ளலாம்.

உடனடி மாணவர் சேர்க்கைக்கான வகுப்புவாரியான இடஒதுக்கீடு, கலந்தாய்வில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள் மற்றும் காலியிடங்களுக்கான அட்டவணை குறித்த விவரம் www.tnjfu.ac.in / www.admission.tnjfu.ac.in என்ற இணைய தள முகவரியில் பார்த்து தெரிந்து கொள்ளலாம் என பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**Spot admission for undergraduate degree programs in the constituent colleges of Tamil Nadu Dr. J. Jayalalithaa Fisheries University, Nagapattinam will be held on 22.09.2025 – Vice-Chancellor Dr. N. Felix announces**

Vice-Chancellor Dr. N. Felix has stated the following...

Spot admission for various undergraduate degree programs such as B.Tech (Biotechnology), B.Tech (Food Technology), BBA (FEM), B.Voc. (Industrial Aquaculture) and B.Voc. (Industrial Fishing Technology) offered in the constituent colleges of University will be conducted in the Tamil Nadu Dr. J. Jayalalithaa Fisheries University Headquarters, Nagapattinam on Monday, 22.09.2025.

Among the candidates who applied for UG admission 2025–26, those who did not pay the counselling fee, those who did not attend the general counselling or missed the counselling may avail this opportunity. However, candidates who were already allotted seats and admitted through general counselling, or those who participated in the counselling and later cancelled their admission or discontinued, will not be eligible to attend this spot admission again for that particular degree program.

Interested students must attend in-person at the University headquarters in Nagapattinam on the specified date. Attendance registration for students will be completed before 11:00 AM, after which they can participate in the counselling.

The attendance register of students participating in the spot admission will be recorded and ranking will be done based on the merit. Then, the students will be called to select their college and degree program. After selecting the college, they must pay the counselling fee (Rs. 100/- for SC/SCA/ST and Rs. 200/- for others) and admission fee (Rs.10,000/-) in the counseling venue to confirm their allotment.

Details about category-wise seat allocation for spot admission, list of students called for counselling, and vacancy position can be viewed at the university websites www.tnjfu.ac.in / www.admission.tnjfu.ac.in, as stated by the Vice-Chancellor.